பணம் தூயதாக்கல்
பயங்கரவாதி நிதியளித்தல்
ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல்

மீதான

# இலங்கை தேசிய இடர்நேர்வு மதிப்பீடு

# 2024/25
# நிறைவேற்றுச் சுருக்கம்








# அ. பொதுநோக்கு

இலங்கையின் தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது (தேசிய இடர்நேர்வு மதிப்பீடு) பணம் தூயதாக்குதல், பயங்கரவாத நிதியளித்தல் மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகளுக்கு நாடு உள்ளாகும் தன்மை பற்றி இனங்கண்டு, மதிப்பிட்டு, புரிந்துகொள்வதற்காக கொண்டுநடாத்தப்படுகின்ற செயன்முறையொன்றாகும். மதிப்பீடானது அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிக்கப்படும் தன்மையின் அடிப்படையிலமைந்த பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகள் பற்றிய நாட்டின் கூட்டான புரிந்துகொள்ளலை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. நிதியியல் நடவடிக்கைச் செயலணி பரிந்துரை 1 இற்கமைவாக நடாத்தப்படுகின்ற தேசிய இடர்நேர்வு மதிப்பீடு, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியளித்தலை ஒடுக்குதல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் உபாயங்களை நடைமுறைப்படுத்துவதற்கும் இனங்காணப்பட்ட இடர்நேர்வுகளை செயல்திறன்மிக்க வகையில் முகாமைசெய்து தணிக்கும் பொருட்டு மூலவளங்களை வினைத்திறன்மிக்கவாறு ஒதுக்கீடு செய்வதற்கும் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த அணுகுமுறையொன்றினை பின்பற்றுவதற்கான அத்திவாரத்தை ஏற்பாடுசெய்கின்றது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது முக்கிய அரசாங்க மற்றும் தனியார் துறை பங்குதாரர் நிறுவனங்களைச் சேர்ந்த நிபுணத்துவப் பிரதிநிதிகளை உள்ளடக்குகின்ற பல்வகை முகவராண்மை பணிக்குழுக்களின் பங்கேற்புடன் நாட்டின் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியளித்தலை ஒடுக்குதல் தேசிய ஒருங்கிணைப்புக் குழுவின் கொள்கை வழிகாட்டலின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நிதியியல் உளவறிதல் பிரிவினால் ஒருங்கிணைக்கப்படுகின்றது. உயர்மட்ட அரசியல்சார் கடமைப்பொறுப்பு தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டிற்கு ஆதரவளிக்கின்றது.

2012இல் நிதியியல் நடவடிக்கைச் செயலணி பரிந்துரைகளின் திருத்தத்தின் பின்னர் நாட்டின் முதலாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2014இல் நடாத்தப்பட்டது. இரண்டாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடானது 2015 தொடக்கம் 2022 வரையான தரவுகளைக் கூட்டிணைத்து, 2021/2022 காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டதுடன் கொவிட்-19 நோய்த்தொற்று மற்றும் பொருளாதார உறுதிப்பாடின்மை மூலம் தோற்றுவிக்கப்பட்ட சவால்களுக்கு மத்தியில் நிறைவுசெய்யப்பட்டது.

2023 – 2025 வரையான தகவல்களைக் கூட்டிணைக்கின்ற இத்தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2024/25, இலங்கையின் மூன்றாவது தேசிய இடர்நேர்வு மதிப்பீடாவதுடன் நாட்டின் முதலாவது ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடாக விளங்கி, பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியளித்தலை ஒடுக்குதல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒடுக்குதல் முறைமையினை வலுப்படுத்துவதற்கான இலங்கையின் முன்னெடுக்கப்படுகின்ற கடமைப்பொறுப்பில் மற்றுமொரு முக்கிய மைல்கல்லை அடையாளப்படுத்துகின்றது.

தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2024/25இன் நிறைவேற்றுச் சுருக்கத்தினை இவ்வறிக்கை எடுத்துரைக்கின்றது.

# ஆ. ஒருங்கிணைத்தல், தரவு சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு

மதிப்பீடானது 86 அரசாங்க நிறுவனங்கள், தனியார் துறை நிறுவனங்கள், மத்திய வங்கி மற்றும் நிதியியல் உளவறிதல் பிரிவு என்பவற்றை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஏறத்தாழ 200 நிபுணர்களின் பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது. நிதியியல் உளவறிதல் பிரிவு தேசிய இடர்நேர்வு மதிப்பீட்டின் தலைமை ஒருங்கிணைப்பாளராகவிருந்தது. சந்தை எதிர்பார்க்கைகள் மற்றும் உலகளாவிய அத்துடன் பிராந்திய பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல்/ ஆயுதப்பெருக்க நிதியளித்தல் பின்னணிகள் மூலம் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு மேலும் மெருகூட்டப்பட்டது.

முன்னைய தேசிய இடர்நேர்வு மதிப்பீடுகள் விடயத்தில் போன்று 2024/25 தேசிய இடர்நேர்வு மதிப்பீடும் பணிக்குழு முறையியலை ஈடுபடுத்தியது. தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/22 இல் உள்ளடக்கப்பட்ட 13 பாடத்தொகுதிகளுக்கு மேலதிகமாக தற்போதைய தேசிய இடர்நேர்வு மதிப்பீடு வரி குற்றங்கள் கூறு மற்றும் ஆயுதப்பெருக்க நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு, பணிக்குழு முறையியல் மற்றும் சுயமதிப்பீட்டு முறையில் என்பவற்றைப் பயன்படுத்தி முறையே மொத்தமாக 15 முக்கிய மதிப்பீட்டு துறைகளில் உள்ளடக்குகின்றது, மதிப்பீட்டை மேற்கொள்வதற்காக இதற்கு 15 பணிக்குழுக்கள் உருவாக்கப்பட்டன.

வரைபடம் 1: முக்கிய மதிப்பீட்டுத் துறைகள்

கூறு 1
தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல்

கூறு 2
தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை

கூறு 3 - 7
பிரிவுசார் பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை

கூறு 8
தேசிய பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

கூறு 9 - 14
ஏனைய கூறுகள்

தேசிய ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு

**பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீட்டுத் துறைகள்**

- கூறு 1: தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல்
- கூறு 2: தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மை
- கூறு 3: வங்கித்தொழில் துறை பாதிக்கப்படும்தன்மை
- கூறு 4: பிணையங்கள் துறை பாதிக்கப்படும்தன்மை
- கூறு 5: காப்புறுதித் துறை பாதிக்கப்படும்தன்மை
- கூறு 6: ஏனைய நிதியியல் நிறுவனங்கள் பாதிக்கப்படும்தன்மை
- கூறு 7: பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா தொழில்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் பாதிக்கப்படும்தன்மை
- கூறு 8: தேசிய பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு
- கூறு 9: நிதியியல் வசதிக்குட்படுத்தல் உற்பத்தி இடர்நேர்வு
- கூறு 10: சுற்றாடல் மற்றும் இயற்கை வள குற்றங்கள் இடர்நேர்வு
- கூறு 11: பயங்கரவாதி நிதியளித்தல் துஸ்பிரயோக இடர்நேர்விலுள்ள இலாப நோக்கற்ற நிறுவனங்கள்
- கூறு 12: சட்ட ரீதியான ஆட்கள், சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகள் மற்றும் பயன்பெறு சொத்தாண்மை தொடர்புபட்ட இடர்நேர்வு
- கூறு 13: மெய்நிகர் சொத்துக்கள் மற்றும் மெய்நிகர் சொத்துப் பணி வழங்குநர்கள் இடர்நேர்வு
- கூறு 14: வரிக் குற்றங்களும் பாதிக்கப்படும்தன்மையும்
- தேசிய ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு

தேசிய இடர்நேர்வு மதிப்பீடுக்கான தரவு சேகரித்தலானது அனைத்தையுமுள்ளடக்கிய மதிப்பீடொன்றை உறுதிசெய்வதற்கு முதலாந்தர மற்றும் இரண்டாந்தர மூலங்கள் இரண்டினையும் ஒன்றிணைத்தது. நேர்காணல்கள், நிபுணத்துவ ஆலோசனைகள், வட்டமேசைக் கலந்துரையாடல்கள், கூட்டங்கள் மற்றும் உரிமம்பெற்ற வங்கிகளின் இணங்குவித்தல் அலுவலர்களின் அமைப்பு அத்துடன் நிதி நிறுவனங்கள் அமைப்பு என்பவற்றுடனான நிதியியல் உளவறிதல் பிரிவிற்கிடையிலான அரசாங்க – தனியார் பங்குடமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, நிதியியல் நிறுவனங்கள், பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா தொழில்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள், இலாப நோக்கற்ற அமைப்புகள், மேற்பார்வை அதிகாரிகள், சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் வேறு தொடர்புடைய பங்குதாரர்கள் என்பவர்களுக்கு பகிரப்பட்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் ஊடாக முதலாந்தர தகவல்கள் சேகரிக்கப்பட்டன. இரண்டாம்தர தரவுகள், நிதியியல் உளவறிதல் பிரிவு, சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள், வழக்குத்தொடுநர்கள், நீதிபதிகள், ஒழுங்குமுறைப்படுத்துநர்கள், மேற்பார்வை அதிகாரிகள் என்போருடன் சேர்த்து உள்நாட்டு மற்றும் பன்னாட்டு அறிக்கைகள், நிறுவனசார் வெளியீடுகள், சட்டரீதியான நியதிச்சட்டங்கள் மற்றும் திறந்த மூல உசாவுகைகள் என்பவற்றிலிருந்தான அளவுசார் மற்றும் பண்புசார் உள்ளீடுகளை உள்ளடக்கியிருந்தது. பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒடுக்குதல் தளத்திலான பரீட்சிப்புக்கள் மற்றும் தளத்திற்கு வெளியிலான கண்காணித்தல் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொண்ட மேற்பார்வை ரீதியாக கண்டறியப்பட்டவைகள் துறைசார் மதிப்பீடுகளுக்குள் கூட்டிணைக்கப்பட்ட அதேவேளை, ஒழுங்குபடுத்தப்படாத அல்லது முறைசாராத் துறைகள் பற்றிய நுண்நோக்குகள், நிபுணத்துவ அபிப்பிராயங்கள், அலுவலக அடிப்படையிலமைந்த ஆராய்ச்சி மற்றும் வெளியிடப்பட்ட ஆய்வுகள் என்பவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டன. ஒட்டுமொத்த மதிப்பீட்டினை வலுப்படுத்துவதற்கு சிறந்த சர்வதேச நடத்தைகளும் பரிசீலனையில் கொள்ளப்பட்டன.

சேகரிக்கப்பட்ட தரவுகளும் தகவல்களும் உலக வங்கியின் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீட்டுக் கருவி மற்றும் ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீட்டு முறையியல் என்பவற்றைப் பயன்படுத்தி பகுப்பாய்வுசெய்யப்பட்டன. பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் / ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வுகள் அச்சுறுத்தலும் பாதிக்கப்படும்தன்மையும் கூட்டாக மதிப்பீடுசெய்யப்பட்டன. பெறுபேறுகளின் அடிப்படையில் ஒவ்வொரு பணிக் குழுவும் கூறுக்கான அறிக்கைகளை வெவ்வேறாக வரைந்தன.

# இ. முக்கியமாகக் கண்டறியப்பட்டவைகள்

## இ.1. ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

வரைபடம் 02: ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு




**தேசிய பணம் தூயதாக்கல் இடர்நேர்வு**

பதிலாளொருவராக சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளிலிருந்து ஈட்டப்படும் முக்கிய பெறுகைகளைப் பிரதானமாகப் பயன்படுத்தி (அடிப்படையான தவறுகள்) இலங்கையின் ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் நடுத்தரமாக மதிப்பிடப்பட்டது. ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மையானது தேசிய ஒடுக்குதல் இயலுமை மற்றும் துறைசார் பணம்தூயதாக்கல் பாதிக்கப்படும்தன்மையைக் கருத்திற்கொண்டு நடுத்தரமாக மதிப்பிடப்பட்டது. அதற்கமைய தேசிய ஒட்டுமொத்த தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும்தன்மை என்பவற்றின் கூட்டாகக் காணப்படுகின்ற **இலங்கையின் தேசிய பணம்தூயதாக்குதல் இடர்நேர்வு நடுத்தரமானதாக** மதிப்பீடுசெய்யப்பட்டது.

**தேசிய பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு**

ஒரே மாதிரியான விதத்தில் **இலங்கையின் தேசிய பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு நடுத்தரம் - உயர்வானதாக** மதிப்பிடப்பட்டது.

| தேசிய பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு தரப்படுத்தல் | இடர்நேர்வு வரைவிலக்கணம் |
|---|---|
| **H: உயர்வானது** | குறிப்பிடத்தக்க ஒட்டுமொத்த அச்சுறுத்தல்களும் பாதிக்கப்படும்தன்மைகளும் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தலுக்கு நாடு உயர்ந்தளவில் பாதிக்கப்படுவதை ஏற்படுத்தி உயர்வான இடர்நேர்வுகளை முகாமைசெய்வதற்கு அதிகரித்த தணிப்பு வழிமுறைகளையும் வலுவான மேற்பார்வைக் கண்காணிப்பையும் வேண்டுகின்றன. |
| **M-H: நடுத்தரம்- உயர்வானது** | கணிசமான பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகள் காணப்படுகின்றது, இருந்தும் உயர்வான இடர்நேர்வை விட தீவிரம் குறைந்தது. அச்சுறுத்தல்களும் பாதிக்கப்படும்தன்மைகளும் குறிப்பிடத்தக்கவைகளாக இருப்பதுடன் நடுத்தர உயர்வான இடர்நேர்வுகளை தடுப்பதற்கு கவனம்செலுத்தப்பட்ட தணிப்பு உபாயங்களையும் அதிகரித்த கண்காணித்தல்களையும் வேண்டுகின்றன. |
| **M: நடுத்தரம்** | சமனிலைப்படுத்தப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுத் தொகுப்பு இங்கு அச்சுறுத்தல்களும் பாதிக்கப்படும்தன்மைகளும் காணப்படுகின்றன. ஆயினும் முகாமைசெய்யத்தக்க அளவில் ஏற்கனவே காணப்படுகின்ற கட்டுப்பாடுகள் பொதுவாக செயல்திறன்மிக்கவை இருந்தும் தொடர்ச்சியாக கண்காணித்தல், மேற்பார்வை மற்றும் இலக்கிடப்பட்ட சென்றடைவு என்பன தேவையாகும். |
| **M-L: நடுத்தரம் - குறைவானது** | செயற்பாட்டிலுள்ள வலுவான தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளுடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுகள் அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும்தன்மைகள் இரண்டும் குறைந்தவை என்பதுடன் அவசியமாகின்றவிடத்து வழமையான கண்காணித்தல், நியம மேற்பார்வை நடத்தைகள் மற்றும் விழிப்புணர்வு என்பன ஊடாக தீர்வு காணப்படலாம். |
| **L: குறைவானது** | பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல்கள் மற்றும் பாதிக்கப்படும்தன்மைகளுக்கு மிகக்குறைந்த பாதிக்கப்படும் நிலை. செயல்திறன்வாய்ந்த தடுப்பு மற்றும் தணிப்பை உறுதிப்படுத்துகின்ற, அடிப்படை மேற்பார்வை மற்றும் விழிப்புணர்வை வேண்டுகின்ற ஆற்றல்வாய்ந்த கட்டுப்பாடுகளுடன் இடர்நேர்வுச் சூழல் நிலையாகக் காணப்படுகின்றது. |

## இ.2. தேசிய பணம்தூயதாக்கல் அச்சுறுத்தல்களின் தொகுப்பு

வரைபடம் 3: : தேசிய பணம்தூயதாக்கல் அச்சுறுத்தல் மட்டங்கள்

| L | M-L | M | M-H | H |
|---|---|---|---|---|

இலங்கையில் பணம்தூயதாக்கல் அச்சுறுத்தலின் ஒட்டுமொத்த தரமிடல் - நடுத்தரம்

**குற்றங்கள் ஊடாக வருவாய்களை ஈட்டுதல் அநேகமாக காணப்படுகின்ற தீவிர தவறுகள்**




| தேசிய பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் தரப்படுத்தல் | அச்சுறுத்தல் வரைவிலக்கணம் |
|---|---|
| **H: உயர்வானது** | நாடு பணம் தூயதாக்கலுக்கு அதிகளவில் உள்ளாக்கக்கூடிய எல்லை கடந்த பாய்ச்சல்களின் வலுவான சான்று மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் வலையமைப்புகள் என்பவற்றுடன் கூடிய குற்றவியல் நடவடிக்கைகள் கணிசமான சட்டத்திற்குப் புறம்பான வருவாய்களை ஈட்டுகின்றமை உயர்வான நிகழும்தன்மை. |
| **M-H: நடுத்தரம்-உயர்வானது** | கணிசமான சட்டத்திற்குப் புறம்பான நிதியியல் பாய்ச்சல்களின் அளவுடன் கூடிய குற்றவியல் நடவடிக்கைகளின் சராசரிக்கு மேற்பட்ட நிகழும்தன்மை. இவ்வச்சுறுத்தல்கள் இன்னும் தீவிரமான கண்காணித்தலையும் இலக்கிடப்பட்ட அமுலாக்கல் நடவடிக்கைகளையும் வேண்டுகின்றன. |
| **M: நடுத்தரம்** | குற்றவியல் நடவடிக்கைகள் மிதமாக நிகழும் மட்டம் அத்துடன் சட்டத்திற்குப் புறம்பான வருவாய்களின் சராசரி மட்டம் அவதானிக்கப்பட்டது. பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் காணப்படுகின்ற அதேவேளை அவை பொதுவாக ஏற்கனவே காணப்படுகின்ற நடைமுறைப்படுத்தல் மற்றும் தடுப்பு வழிமுறைகளைக் கொண்டு முகாமைசெய்யத்தக்கவை. |
| **M-L: நடுத்தரம் - குறைவானது** | மட்டுப்படுத்தப்பட்ட குற்றவியல் செயற்பாடு மற்றும் ஒப்பீட்டளவில் குறைவான சட்டத்திற்குப் புறம்பான நிதியியல் பாய்ச்சல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. வலுவான தடுப்பு முறைமைகளும் அமுலாக்க இயலளவும் பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் நிகழக்கூடியதை குறைக்கின்றன. |
| **L: குறைவானது** | குற்றவியல் நடவடிக்கை நிகழும்தன்மை மிகக்குறைவு/ குறைவு மற்றும் புறக்கணிக்கத்தக்களவு சட்டத்திற்குப் புறம்பான வருவாய்கள் ஈட்டப்படுகின்றன. ஆற்றல்வாய்ந்த கட்டுப்பாடுகள் மற்றும் அமுலாக்கம் செயல்திறன்வாய்ந்த தடுப்பினை உறுதிசெய்வதன் மூலம் பணம் தூய்தாக்கல் அச்சுறுத்தலிற்கு மிகக்குறைவாக ஆட்படும்தன்மை. |

**இலங்கையின் குறிப்பிடத்தக்க குற்ற வகைகள்**

### போதைப்பொருள் கடத்தல்

- **உயர்வான** பணம்தூயதாக்கல் அச்சுறுத்தல்களைத் தூண்டுகின்ற மெத்தம்பெட்டமைன் வகை கலந்த செயற்கை போதைவஸ்து கடத்தலின் வளர்ந்துவருகின்ற போக்குடன் கூடிய போதைப்பொருள் கடத்தலுக்கான இடமாறல் நாடாக இலங்கை காணப்படுகின்றது.

- அநேகமாக பொருட்களில் மறைத்து மற்றும் வான் விரைவஞ்சல்கள் வாயிலாக கடத்தப்படுகின்ற இலக்கிடப்பட்ட அடைவிடங்களை நோக்கிய கடத்தல் அவதானிக்கப்படுகின்றது.

- தொடர்பூட்டல் தளங்களைப் பயன்படுத்துகின்ற செயன்முறைகளுக்கு மாறுதல் புலன் விசாரணைகளை சிக்கலாக்குகின்றது.

- நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மீதான முக்கிய சட்ட அமுலாக்க முகவராண்மை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு சந்தையினை ஓரளவிற்கு அடக்குவதற்கு குறிப்பிடத்தக்க கைதுகள் மற்றும் பறிமுதல்களுக்கு வழிவகுத்துள்ளன. ஹெரோயின் கடத்தலுடன் இணைந்த கும்பல் தொடர்புபட்ட வன்முறை இவ்அமுலாக்க அடைவுகளுக்கு தொடர்ந்தும் சவால் விடுக்கின்றது.

### மோசடி

- பாரியளவு கொடுக்கல்வாங்கல்கள் அடிக்கடி இடம்பெறும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளமை அறிக்கையிடப்பட்டுள்ளதுடன் நிதியியல் நிறுவன உற்பத்திகள்/ வழிகளுடன் இணைந்த துஷ்பிரயோகம் **நடுத்தர-உயர்வான** பணம்தூயதாக்கல் அச்சறுத்தலை சுட்டிக்காட்டுகின்றன.

- பெருமளவில் வெளிநாட்டு தேசத்தவர்களை இலக்கு வைத்து வெளிநாட்டு மோசடிக்காரர்களின் தலைமையிலான 'மோசடி நிலையங்கள்'பற்றிய பல அண்மைய விசாரணைகள் "இணையவழி முதலீடு மற்றும் உறவு"என அறியப்படுகின்ற வளர்ந்துவரும் அச்சுறுத்தல்களைக் குறித்துக்காட்டுகின்றன.

- சமூக ஊடகங்கள், உடனடி செய்தியனுப்பல் மற்றும் அளவளாவல் தளங்கள் வாயிலாக ஊக்குவிக்கப்படும் மோசடியான செயற்பாட்டை வளர்ந்துவருகின்ற போக்குகள் எடுத்துக்காட்டுகின்றன.

- அதிகரித்த பொதுமக்கள் விழிப்புணர்வுடன் ஒன்றுசேர்ந்து இலங்கை மத்திய வங்கி மற்றும் சட்ட அமுலாக்க முகராண்மை முயற்சி உள்ளடங்கலாக தேசிய மட்டத்தில் கவனம்செலுத்தப்பட்ட விசாரணைகள், கண்டுபிடித்தல் மற்றும் தடங்கல் முயற்சிகள் உயர்வான பெறுபேறுகளை விளைவித்துள்ளன.

### சுங்கம் தொடர்புபட்ட தவறுகள்/ வர்த்தகம் அடிப்படையிலான பணம்தூயதாக்கல்

- உயர்வான நிகழ்வுகளின் எண்ணிக்கை, விதிக்கப்படும் பாரிய அபராதங்கள் என்பன சட்டத்திற்குப் புறம்பான நிதியியல் பாய்ச்சல் நகர்வுகளுடன் இணைந்துள்ள வர்த்தக அடிப்படையிலமைந்த பொருட்களின் மார்க்கத்தினை குறிப்பிடுகின்றன.

- இலங்கைச் சுங்கம், வங்கிகள் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மூலமான அண்மைய எதிர்ப்பு வழிமுறைகள் சட்டத்திற்குப் புறம்பான பாய்ச்சல்களைத் தணிப்பதற்கான தேசிய முயற்சிகளை எடுத்துக்காட்டுகின்றன.

- இலங்கைச் சுங்கம் மூலம் பணம்தூயதாக்கலை விசாரணை செய்கின்ற சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட ஆற்றுப்படுத்தல்களும் பணம்தூயதாக்கல் பற்றிய விசாரணைகள் சுங்கத் தவறுகளுக்குள் குறைவான ஊடுருவலும் இவ்வச்சுறுத்தலை **நடுத்தரம் உயர்வானது** ஆக இடம்பெறச்செய்கின்றன

## இலங்கையின் ஏனைய குற்ற வகைகள்

### இலஞ்சம் மற்றும் ஊழல்

- 2023 செத்தெம்பர் தொடக்கம் புதிய சட்டவாக்கத்தினால் துணையளிக்கப்பட்டு இலஞ்சம், ஊழல் மற்றும் சொத்து வழக்குகளுடன் தொடர்புபட்ட வலுப்படுத்தப்பட்ட விசாரணைகள்.
- உயர்மட்ட ஆட்களின் வழக்குகளும் பாரிய ஊழல் வழக்குகளும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் புதிய அனுகுமுறையொன்றினைப் பயன்படுத்தி விசாரணை செய்யப்படுகின்றன.
- இம்முயற்சிகள் பொதுமக்கள் அபிப்பிராயத்தை சாதகமாக மாறுதலடையச்செய்து, இல்ல ாதொழிக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்கின்றன.
- பணம் தூயதாக்கல் விசாரணை அதிகாரங்கள், வழக்குத்தொடுத்தல்கள் மற்றும் இடையூறு நடவடிக்கைகள் நடுத்தர மட்ட பணம் தூயதாக்கல் அச்சுறுத்தலை நோக்கி சாதகமாகப் பிரதிபலிக்கின்றது.

### ஆட்களைக் கடத்துதல்

- கட்டாயப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள், பாலியல் சுரண்டல், புலம்பெயர்பவர்களைக் கடத்துதல் (இடமாறல் மற்றும் சென்றடைவிடக் கடத்தல்) போன்றனவாக மனிதக் கடத்தல் நிகழ்வுகள் பெருமளவில் காணக்கூடியதாகவிருக்கின்றது.
- அவயவங்களைக் கடத்துதல் மற்றும் கட்டாயப்படுத்தப்பட்ட குற்றவியல் கடத்தல்கள் பற்றிய ஆங்காங்கேயான நிகழ்வுகள்.
- மானிடக் கடத்தலிலிருந்து தோன்றுகின்ற அச்சுறுத்தல் நாட்டின் சமூகப் பொருளாதார மற்றும் புவிசார் அரசியல் காரணமாக மிதமானளவு மிகைப்பட்டுள்ளது.
- மோசடியான ஆட்சேர்ப்பு முகவர்கள், போலியாகப் புனையப்பட்ட ஆவணம் மற்றும் பின்தங்கிய சமூகத்தை இலக்குவைத்த அச்சுறுத்திப் பணம் பறித்தல் என்பன மூலமான சுரண்டலிலிருந்து நிதியியல் வருவாய்கள்.
- நிகழ்வுகளுக்கு மத்தியில் பணம் தூயதாக்கல் வருவாய்களை குறைவான கண்டுபிடிப்பதன் மூலம் குற்றத்தீர்ப்பளித்தல் குறைவாகக் காணப்படுகின்றது. பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் **நடுத்தரமானது** ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

### கொள்ளை

- கொள்ளை, வீடுடைப்பு மற்றும் பணம் பறித்தல் என்பன காலப்பகுதி முழுவதும் நிலையானதாகக் காணப்பட்டன.
- 2023இல் பொருளாதார அழுத்தங்களின் காரணமாக கண்டுபிடித்தல், புலனாய்வு, வழக்குத்தொடுத்தல் மற்றும் குற்றத்தீர்ப்பளிப்பு மட்டங்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக் காணப்பட்டதுடன் பின்னர் வருடாந்த சராசரி மட்டங்களுக்கு அண்மித்துத் திரும்பலடைந்தது.
- அதிகரித்த விசாரணை எண்ணிக்கைகளுடன் ஒப்பிடுகையில் வழக்குத்தொடுத்தல் மட்டுப்படுத்தப்பட்டு காணப்பட்டதுடன் குற்றத்தீர்ப்பளித்தல் மட்டங்கள் குறைவானதாகும்.
- கொள்ளையிலிருந்து கிடைக்கும் வருவாய்கள், நுகர்வு முறைகள் மற்றும் அமுலாக்கல் போக்குகள் என்பவற்றை நோக்காகக் கொண்டு ஈட்டப்படும் வருவாய்கள் என்பவற்றின் தூய்தாக்குதலின் குறைந்தபட்ச அளவும் சிக்கல்வாய்ந்த தன்மையும் பணம் தூய்தாக்கல் அச்சுறுத்தலை **நடுத்தரமானதாகக்** காட்டுகின்றன.

### சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் குற்றங்கள்

- வனவிலங்கு, காடாக்கம், மீன்பிடி, அகழ்வு, கழிவு மற்றும் மாசாக்கம் அத்துடன் வேறு தொடர்புபட்ட தவறுகள் மதிப்பிடப்பட்டன.
- சுற்றாடல் மற்றும் இயற்கை வளத் துறையுடன் தொடர்புபட்ட குற்றங்கள் நிகழக்கூடிய நிலைமையினை எடுத்துக்காட்டுவதுடன் சுற்றாடல் சார்ந்த சூழல் அமைப்பு மற்றும் குற்றவியல் தோற்ற அமைப்பு மீதான மிதமான தாக்கத்தினைத் தீவிரப்படுத்துகின்றன.
- 2022-2025 காலப்பகுதியில் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் குற்றங்களுக்காக நிர்வாக ரீதியான தடைகள், விசாரணைகள், வழக்குத்தொடுத்தல்கள் மற்றும் குற்றத்தீர்ப்பளிப்புகள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- குற்ற இடர்நேர்வுக் கூறு பற்றிய மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகள் பணம் தூயதாக்குதல் அச்சுறுத்தலை **நடுத்தரமானதாகப்** பிரதிபலிக்கின்றன.

### சட்டத்திற்குப் புறம்பான அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி தொடர்புபட்ட செயற்பாடுகள்

- சட்டத்திற்குப் புறம்பான, அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத மீன்பிடி தொடர்புபட்ட செயற்பாடுகளுடன் சில இடைத்தொடர்புகளுடன் ஆட்கடத்தல் மற்றும் போதைப்பொருள் கடத்தல் போன்ற வேறு அடிப்படை தவறுகளுக்காக இலங்கையின் கடல்சார் பயண வழிகள் தவறாகப் பயன்படுத்தப்படக்கூடும்.
- ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் வலையமைப்புடன் கடல்சார்/ கடற்றொழில் கலங்கள் மற்றும் ஆளணி என்பவற்றின் போலியான ஈடுபாட்டை அவதானிக்கப்பட்ட நிகழ்வுகள் தெரிவிக்கின்றன.
- பல நாள் மீன்பிடிக் கலங்கள், மீன்பிடித் துறைமுகங்களில் கரைசேர்வதை குறைவாகக் கண்காணித்தல் போன்றவற்றிலிருந்து பாதிக்கப்படும் தன்மைகள் தோன்றுகின்றன.
- இலங்கை கடற்படை, கரையோரப் பாதுகாப்புப் படை மற்றும் சுங்கம் என்பவற்றுடனான ஒருங்கிணைப்புடன் வலுவான தணிப்புப் பொறிமுறை தொடங்கப்பட்டது,
- தெற்கு பயணவழி, கடற்றொழில் வர்த்தகம், உயர்வான காசுப் பரிமாற்றம் மற்றும் முறைசாரா சந்தை என்பன காரணமாக அச்சுறுத்தல் மட்டம் **நடுத்தரமானதாக** மதிப்பிடப்பட்டுள்ளது.

## வரிக் குற்றங்கள்

- நேரடி மற்றும் நேரடியற்ற வரிகள் இரண்டும் வரிக் குற்றத்தில் அச்சுறுத்தல் மதிப்பீடாகக் கருதப்பட்டன.
- நேரடி மற்றும் நேரடியற்ற வரிகளுக்கான திரட்டு இணங்குவித்தல், மதிப்பீட்டுக் காலப்பகுதியின் போது மிதமான மட்டத்தில் நிலவி, வரி செலுத்துநர்களின் நடுத்தர மட்ட இணங்குவித்தல் நடத்தையினை எடுத்துக்காட்டுகின்றது.
- இலங்கையின் முதலாவது தேசிய வரிசெலுத்துநர் எண்ணப்பாங்கு ஆய்வு – 2024 மற்றும் உலகளாவிய ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் சுட்டெண் 2023 என்பன பிராந்திய சகநாடுகளுடன் ஒப்பிடுகையில் நிலவுகின்றமை மற்றும் தாக்கம் என்பவற்றின் மிதமான மட்டங்களுடன் நாட்டில் வரி ஏய்ப்பு காணப்படுவதனைக் குறிப்பிடுகின்றன.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினுள் புதிய வரிக் குற்றங்கள் புலனாய்வுப் பிரிவினைத் தாபித்தன் மூலம் பல வரிக் குற்றப் புலனாய்வுகள் 2024 மற்றும் 2025 காலப்பகுதியில் தொடங்கப்பட்டன.
- வரிக் குற்றக் கூறு பற்றிய மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகள் பணம் தூயதாக்குதல் அச்சுறுத்தலை **நடுத்தரமானதாகப்** பிரதிபலிக்கின்றன.

## மது வரிக் கட்டளைச் சட்டத்தின் கீழான மீறுகைகள்

- 2019 மற்றும் 2024ஆம் ஆண்டுகளுக்கிடையில் கஞ்சா உடமையில் வைத்திருத்தல் மது வரித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட மிக அடிக்கடியான கண்டுபிடித்தல்களாகவும் அதனைத்தொடர்ந்து ஹெரோயின் பற்றிய சில கண்டுபிடித்தல்களும் காணப்பட்டன.
- கண்டுபிடித்தல்கள் பற்றிய ஒட்டுமொத்த அளவு கால இடைவெளியும் நிதியியல் சிக்கல்வாய்ந்த தன்மையில் குறைவான மட்டத்தினை எடுத்துக்கூறுவதுடன் அநேகமான குற்ற வகைகள் நுகர்வுமுறைகளைக் காண்பிக்கின்றன.
- பறிமுதல்களின் ஒப்பீட்டளவில் மிதமான அளவினையும் வழக்குத்தொடுத்தல்களில் இடம்பெறும் குறைவான பெறுமதிகளையும் கருத்திற்கொள்கையில் பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல்கள் **நடுத்தரம்-குறைவானதாக** தரப்படுத்தப்பட்டுள்ளது.

## நாணயம் போலிபுனைதல்

- தூயதாக்குதல் முயற்சிகள் ஏதுமிருப்பின், முன்கூட்டியே கண்டுபிடிப்புகள், முறியடிப்பதன் மூலம் இவ்வகையான தவறுகளுடன் தொடர்புபட்ட நிகழ்வுகள் குறைவான எண்ணிக்கையாகும்.
- ஒப்பீட்டளவில் மிதமான பறிமுதல் அளவுகள் மற்றும் வழக்குத்தொடுத்தல்களில் ஈடுபடுத்தப்படும் அளவு என்பவற்றைக் கருத்திற்கொள்கையில் பணம் தூயதாக்கல் அச்சுறுத்தல் **குறைவானதாகக்** காணப்படுகின்றது.

## இ.3. தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மை பற்றிய சுருக்கம்

வரைபடம் 4: தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மை




| தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்க்கப்படும் தன்மை தரப்படுத்தல் | பாதிக்கப்படும் தன்மை வரைவிலக்கணம் |
|---|---|
| **H:** உயர்வானது | நாடு பணம் தூயதாக்கலுக்கு குறிப்பிடத்தக்க மற்றும் முறைமைசார் உட்படும் தன்மையினை எதிர்கொள்கின்றது. தேசிய முறியடித்தல் இயலுமையானது பலவீனமானதாக அத்துடன்/அல்லது துறைசார் பாதிக்கப்படும் தன்மை உயர்வானதாகவிருந்து தடுத்தல், கண்டுபிடித்தல் மற்றும் அமுல்படுத்தல் என்பவற்றில் முக்கிய இடைவெளிக்கு வழிவகுக்கின்றது. |
| **M-H:** நடுத்தரம்-உயர்வானது | தேசிய முறியடித்தல் இயலுமையில் அல்லது ஒரு அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட முக்கிய துறைகளில் குறிப்பிடத்தக்க பலவீனங்கள் மூலம் தோற்றுவிக்கப்பட்ட முக்கிய பாதிக்கப்படும் தன்மைகளை நாடு கொண்டுள்ளது. சில கட்டுப்பாடுகள் ஏற்கனவேயுள்ள அதேவேளை முக்கிய இடர்நேர்வுகளைக் கணிப்பதற்கு அவை போதுமானளவு செயல்திறன் மிக்கவையல்ல. |
| **M:** நடுத்தரம் | தேசிய மற்றும் துறைசார் கட்டுப்பாடுகள் பல இடர்நேர்வுகளை தணிப்பதாயினும் ஒன்றில் ஒழுங்கற்ற நடைமுறைப்படுத்தல் அல்லது குறிப்பான துறைசார் பலவீனம் காரணமாக ஆக்கபூர்வமான பாதிக்கப்படும் தன்மைகள் தொடர்ந்தும் இருக்கின்றன. |
| **M-L:** நடுத்தரம் - குறைவானது | மட்டுப்படுத்தப்பட்ட பாதிக்கப்படும் தன்மைகளுடன் மாத்திரம் தேசிய அல்லது துறைசார் மட்டங்களில் உள்ள கட்டுப்பாடுகள் பொதுவாக வலுவானதும் செயல்திறன் மிக்கவையுமாகும். இனங்காணப்பட்ட இடைவெளிகள் கட்டுப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதுடன் செயலூக்கமிக்க தணித்தலுக்குட்படுகின்றன. |
| **L:** குறைவானது | வலுவான துறைசார் கட்டுப்பாடுகள் மூலம் துணையளிக்கப்படும் ஆற்றல்வாய்ந்த, முதிர்ச்சியடைந்த மற்றும் ஒத்திசைவாக செயல்திறன்மிக்க பணம் தூயதாக்கலுக்கெதிரான கட்டமைப்பினை நாடு கொண்டுள்ளது. |

## தேசிய பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மை

பணம் தூயதாக்கலுக்கான இலங்கையின் தேசிய பாதிக்கப்படும் தன்மையானது துறைசார் பாதிக்கப்படும் தன்மைகளை தணித்து எதிர்வினையாற்றக்கூடிய நாட்டின் ஒட்டுமொத்த இயலளவினை பரீட்சிப்பதன் மூலம் மதிப்பிடப்பட்டது. இம்மதிப்பீடானது வழக்குத்தொடுநர்களின் இயலளவுகள், இலங்கைப் பொலிஸ், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கைச் சுங்கம் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு உள்ளடங்கலாக சட்ட அமுலாக்க முகவராண்மைகள் என்பவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு சட்ட மற்றும் நிறுவனசார் கட்டமைப்பின் செயல்திறன்வாய்ந்த தன்மையினை மீளாய்வு செய்தது. சட்டங்களின் போதுமான தன்மை, பயிற்சி மட்டங்கள், நேர்மை, வளங்கள் கிடைக்கப்பெறும்தன்மை அத்துடன் முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு என்பவற்றை முக்கிய நோக்குகள் கருத்திற்கொண்டன.

மேம்பட்ட சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்புகள் மற்றும் தகைமைபெற்ற அதிகாரசபைகளினுள் பிரத்தியேகமான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பிரிவுகளைத் தாபித்தல் மற்றும் முகராண்மைகளுக்கிடையிலான பணியாற்றும் குழுக்கள் என்பவற்றுடன் பணம் தூயதாக்கலுக்கெதிரான கட்டமைப்பினை வலுப்படுத்துவதில் முன்னேற்றத்தை மதிப்பீடு காண்பித்தது. மேலும், மதிப்பீட்டின் போது ஏனைய மேம்பாடுகள் அவதானிக்கப்பட்டுள்ளமைக்கு மத்தியில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் பயிற்சி மற்றும் சென்றடைவு நிகழ்ச்சித்திட்டங்கள் காரணமாக அறிக்கையிடும் நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கிடையில் அதிகரித்த இயலளவு மற்றும் விழிப்புணர்வு என்பன முகராண்மைகளுக்கிடையில் புதிய தொழில்நுட்பங்களைப் பின்பற்றுதல் உள்ளடங்கலாக மேம்பட்ட தகவல் மற்றும் புலனாய்வுகளைப் பகிர்ந்துகொள்ளலை அதிகரித்துள்ளது.

இம்முன்னேற்றங்களுக்கு மத்தியில், பணம் தூயதாக்கலுக்கான இலங்கையின் ஒட்டுமொத்த பாதிக்கப்படும் தன்மை **நடுத்தரம்** மட்டத்தில் காணப்பட்டு, முழுமையாக மத்திய மயப்படுத்தப்பட்ட டிஜிட்டல் தரவுத்தளமொன்றிற்கான தேவை மற்றும் பணம் தூயதாக்கல் விசாரணைகள் மற்றும் வழக்குத்தொடுத்தல்களை பாதிக்கின்ற மூலவளத் தடைகளைத் தீர்த்தல் போன்ற ஏற்கனவே காணப்படுகின்ற இடைவெளிகளுக்கு தீர்வுகாணவேண்டிய தேவையினைப் பிரதிபலிக்கின்றது.

## ஈ.5. துறைசார் பணம் தூயதாக்குதல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வுத் தொகுப்பு

வரைபடம் 5: துறைசார் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு

**நடுத்தரம் - உயர்வானது**

- வங்கி
- நிதிக் கம்பனிகள்
- கெசினோக்கள்
- உண்மைச் சொத்து
- அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்கள்
- முறைசாரா பணம் மாற்றல் பணிகள்

**நடுத்தரம்**

- பங்குத்தரகர்கள்
- முதனிலை வணிகர்கள்
- காப்புறுதி
- நம்பிக்கை பொறுப்பு மற்றும் கம்பனி பணி வழங்குநர்கள்
- சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுக்கள்
- பணம் மற்றும் பெறுமதிமாற்றல் சேவை பணி வழங்குநர்கள்

**நடுத்தரம் - குறைவானது**

- கணக்காளர்கள்
- கூறு நம்பிக்கைகள் மற்றும் முதலீட்டு முகாமையாளர்கள்
- இ-பண பணி வழங்குநர்கள்
- கூட்டுறவுச் சங்கங்கள்
- சமூர்த்தி வங்கிகள்
- ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்கள்
- முறைசாரா அடகு பிடிப்போர்
- முறைசாரா பணம் கடன்வழங்குநர்கள்
- மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள்
- உரிமம்பெற்ற நுண்நிதிக் கம்பனிகள்

**குறைவானது**

- குத்தகைக்குவிடும் கம்பனிகள்

வரைபடம் 6: துறைசார் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

**நடுத்தரம்**

- முறைசாரா பணம் மாற்றல் பணிகள்

**நடுத்தரம் - குறைவானது**

- வங்கித்தொழில்
- நிதிக் கம்பனிகள்
- பணம் மற்றும் பெறுமதிமாற்றல் சேவை பணி வழங்குநர்கள கெசினோக்கள்
- பங்குத்தரகர்கள்
- முதனிலை வணிகர்கள்
- காப்புறுதி
- இ-பண பணிவழங்குநர்கள்
- கூட்டுறவுச் சங்கங்கள்
- சமூர்த்தி வங்கிகள்
- ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்கள்
- குத்தகைக்குவிடும் கம்பனிகள்
- உண்மைச் சொத்து
- கெசினோக்கள்
- சட்டத்தரணிகள் மற்றும் நொத்தாரிசுக்கள்
- அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்கள்
- கணக்காளர்கள்
- நம்பிக்கை பொறுப்பு மற்றும் கம்பனி பணி வழங்குநர்கள்
- ஒழுங்குபடுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்கள்
- முறைசாரா அடகு பிடிப்போர்
- முறைசாரா பணம் கடன் வழங்குநர்கள்

## வங்கித்தொழில் துறை

### பணம் தூயதாக்கல் இடர்நேர்வு – நடுத்தரம் உயர்வானது

வங்கித்தொழில் துறை அதிகூடிய அச்சுறுத்தல் மட்டம் மற்றும் நடுத்தரமான பாதிக்கப்படும் தன்மை என்பன மூலம் தூண்டப்பட்டு **நடுத்தரம்-உயர்வான** பணம் தூயதாக்கல் இடர்நேர்வைக் கொண்டிருக்குமொன்றாக மதிப்பீடுசெய்யப்பட்டுள்ளது. வலுவான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டமைப்புக்கள், இடர்நேர்வு அடிப்படையிலமைந்த மேற்பார்வை மற்றும் ஆற்றல்வாய்ந்த சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல் தணிப்பு இடர்நேர்வுகள், அமுலாக்கல் மட்டுப்பாடுகள் காரணமாக எஞ்சியிருக்கும் பாதிக்கப்படும் தன்மைகள் என்பன வலுவாகக் காணப்படுகின்ற அதேவேளை, வாடிக்கையாளர் உறுதிப்படுத்தல் உட்கட்டமைப்பில் இடைவெளிகள் மற்றும் சில உற்பத்திகளுள் இணையப்பெற்ற உட்பொதிந்த இடர்நேர்வு அவ்வாறே காணப்படுகின்றது. மேலும், வங்கித்தொழில் துறையும் தவணை வைப்புக்கள் போன்ற அதன் உற்பத்திகளும் இனங்காணப்பட்ட பாரிய பணம் தூயதாக்கல் வழக்குகளுடன் இணைந்தவை அத்தகைய வழக்குகளின் அளவினை நிதியியல் சொத்து குவித்தல் மற்றும் கொடுக்கல்வாங்கல் பெறுமதிகள் என்பவற்றைக் கருத்திற்கொள்கையில் துறையின் அச்சுறுத்தல் மட்டம் உயர்வாகக் காணப்படுகின்றது.

### பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு - நடுத்தரம் குறைவானது

வங்கித்தொழில் துறையின் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு **நடுத்தரம்-குறைவானது** ஆக சிறிதளவு அதிகரித்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல் மட்டத்தில் அதிகரிப்பு இதற்குப் பிரதான காரணமாக அமைகின்ற அதேவேளை துறையின் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

## பிணையங்கள் துறை

### பணம் தூயதாக்கல் இடர்நேர்வு – நடுத்தரம்

இலங்கையின் பிணையங்கள் துறையானது பட்டியலிடப்பட்ட சாதனங்களின் உயர்வான திரவத்தன்மை, மிதமான உட்பொதிந்த இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை, சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை குறைவாக அறிக்கையிடல் மற்றும் இயலளவுத் தடைகள் என்பன மூலம் தூண்டப்பட்டு **நடுத்தரமான** பணம் தூயதாக்கல் இடர்நேர்வைக் கொண்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வலுவான சட்டக் கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாடுகள் மற்றும் மேற்பார்வையினை அதிகரித்தல் என்பன அவதானிக்கப்பட்ட நடுத்தர இடர்நேர்வைத் தணிப்பதற்கு இட்டுச்செல்கின்றன.

### பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு - நடுத்தரம் குறைவானது

பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வானது **நடுத்தரம் குறைவானது** ஆக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது துறையிலுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் மேம்பட்ட விழிப்புணர்வு என்பவற்றை வலுப்படுத்தவதற்கு மத்தியில் நாடு பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தலை நடுத்தரத்திலிருந்து நடுத்தரம் உயர்வானது ஆக அதிகரித்தமை காரணமாக முன்னைய மதிப்பீட்டிலிருந்தான குறைவான மட்டத்திலிருந்து அதிகரிப்பொன்றாகும்.

# காப்புறுதித் துறை

**பணம் தூயதாக்கல் இடர்நேர்வு – நடுத்தரம்**

காப்புறுதித் துறையின் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு விரிவடைகின்ற ஆயுட்காப்புறுதி உற்பத்திகள், உயர்வான கட்டுப்பண அளவுகள், பரந்தளவிலான இடையீட்டாளர் ஈடுபாடு மற்றும் அதிகரிக்கின்ற வாடிக்கையாளர் சிக்கல்வாய்ந்ததன்மை காரணமாக அதிகரித்துள்ளது. பணம் தூயதாக்கலுக்கெதிரான கட்டுப்பாடுகள் காணப்படுகின்ற போதிலும் ஒப்பீட்டளவில் குறைவான சந்தேகத்திற்கிடான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல், பணக் கொடுக்கல்வாங்கல்களுக்கு அதிகரித்தளவில் உட்படுதல் என்பன பணம் தூயதாக்கல் இடர்நேர்வைத் தீவிரப்படுத்தி ஒட்டுமொத்த பணம் தூயதாக்கல் இடர்நேர்வு நடுத்தரம் குறைவானது இலிருந்து **நடுத்தரம்** ஆக மேல்நோக்கித் திருத்துவதற்கு வழிவகுக்கின்றது.

**பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு - நடுத்தரம் குறைவானது**

தேசிய பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல் நடுத்தரத்திலிருந்து நடுத்தரம் உயர்வானதாக உயர்வடைந்தமையின் காரணமாக காப்புறுதித் துறை ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வானது துறைசார் கட்டுப்பாடுகள் மாற்றமின்றிக் காண்படுவதன் மூலம் குறைவானதிலிருந்து **நடுத்தரம்-குறைவானது** மட்டத்திற்கு சிறிதளவு அதிகரித்துள்ளது.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

**பணம் தூயதாக்கல் இடர்நேர்வு:**

ஏனைய நிதியியல் நிறுவனங்களுக்குள் நிதிக் கம்பனிகளும் முறைசாரா பணம் மாற்றல் பணிகளும் பிரதானமாக அவற்றின் காசுச் செறிவுத் தொழிற்பாடுகள்/ உற்பத்திகள், ஈட்டு வாடிக்கையாளர் வகுப்பினர்கள் மற்றும் சட்டத்திற்குப் புறம்பான நிதி அசைவுகளுக்கான தவறாகப் பயன்படுத்தக்கூடிய சாத்தியப்பாடு என்பன காரணமாக நடுத்தரம்- உயர்வான பணம் தூயதாக்குதல் இடர்நேர்வைத் தோற்றுவிக்கின்றன. பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்கள் அண்மைய பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாக முன்னெடுக்கப்படுகின்ற ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை மற்றும் சட்டவாக்க முன்முயற்சிகள் என்பவற்றின் அடிப்படையில் நடுத்தர இடர்நேர்வாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இ-பண பணி வழங்குநர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமூர்த்தி வங்கிகள், ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நுண்நிதி நிறுவனங்கள், மட்டுப்படுத்தப்பட்ட வணிகர்கள் மற்றும் உரிமம்பெற்ற நுண்நிதிக் கம்பனிகள் என்பன நடுத்தரம்-குறைந்த இடர்நேர்வாக மதிப்பிடப்பட்டு முகவர் கண்காணித்தல் பொறிமுறைகள் காணப்படுவதையும் உன்னிப்பான ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வையையும் பரந்தளவில் வசதிகுறைந்த சமூகத்திற்கு பணியாற்றும் உற்பத்திகளையும் பிரதிபலிக்கின்றது. முறைசாரா அடகுபிடிப்போரும் முறைசாரா பணம் கடன் வழங்குவோரும் பெருமளவில் முறைசார் நிதியியல் துறையினது வலுவான ஒழுங்குபடுத்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட உற்பத்தி வகை என்பவற்றிலிருந்து வரும் கசிவுத்தாக்கங்கள் காரணமாக நடுத்தரம்-குறைவானது இடர்நேர்வாக மதிப்பிடப்பட்டுள்ளன. மட்டுப்படுத்தப்பட்ட காசுக் கடன்தொகை, சிறிய எண்ணிக்கையிலான நிறுவனங்கள் மற்றும் ஒப்பீட்டளவில் வலுவான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டுப்பாடுகள் காரணமாக குத்தகைக்குவிடும் கம்பனிகள் குறைவான இடர்நேர்வாக மதிப்பிடப்பட்டுள்ளன.

**பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு:**

ஏனைய நிதி நிறுவனங்களின் நான்கு துணை வகைகளுக்கிடையில் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு செய்யப்பட்டது. நாட்டின் ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல் நடுத்தரம்-உயர்வானது ஆக அதிகரித்துள்ள போதிலும் முறைசாரா பணம் பெறுமதி மாற்றல் பணிகள் துறையின் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு நடுத்தரமானதாக மதிப்பிடப்பட்டுள்துடன் பிரதானமாக துறையினுள் அதிகரித்த கட்டுப்பாடுகள் காரணமாக தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/22 இலிருந்து மாற்றமின்றிக் காணப்படுகின்றது. பணம் அல்லது பெறுமதி மாற்றல் பணி வழங்குநர்களின், ஏனைய ஒழுங்குமுறைப்படுத்தப்படும் நிதியியல் நிறுவனங்களின் வேறு ஒழுங்குமுறைப்படுத்தப்படாத நிதியியல் நிறுவனங்களின் பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு நடுத்தரம்-குறைவானது ஆக மதிப்பீடு செய்யப்பட்டதுடன் துறை மட்டக் கட்டுப்பாடுகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்படாமையினாலும் பயங்கரவாதி நிதியளித்தலுக்கான ஆட்படும்தன்மை மட்டுப்படுத்தப்பட்டு வருவதனாலும் தேசிய இடர்நேர்வு மதிப்பீடு 2021/22 இலிருந்து மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

## பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகள்

**பணம் தூயதாக்கல் இடர்நேர்வு:**

கெசினோக்கள், உண்மைச் சொத்து முகவர்கள், அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்கள் என்பன நடுத்தரம்-உயர்வான பணம் தூயதாக்கல் இடர்நேர்வைக் கொண்டவையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. இம்மதிப்பீடானது கெசினோ மற்றும் உண்மைச் சொத்துத் துறைகளில் காணப்படும் நடுத்தரம் - உயர்வான அச்சுறுத்தல் மற்றும் அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர்களில் நடுத்தர அச்சுறுத்தல் என்பன அனைத்து மூன்று துறைகளுக்கிடையிலும் நடுத்தரம்-உயர்வான பணம் தூயதாக்குதல் பாதிக்கப்படும்தன்மையுடன் ஒன்றிணைந்து தூண்டப்பட்டது. கெசினோ மற்றும் அருமையான உலோகங்கள் மற்றும் கற்கள் வணிகர் துறைகளில் உயர்வடைந்த பணம் தூயதாக்கல் இடர்நேர்வு முதன்மையாக அவற்றின் காசு செறிவுத்தன்மை மற்றும் துறைகளின் அளவு மூலம் தூண்டப்படுகின்றது. உண்மைச் சொத்து முகவர்களின் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு மட்டம் முன்னைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் மாற்றமின்றிக் காணப்படுகின்றது.

சட்டத்தரணிகள், நொத்தாரிசுக்கள் மற்றும் ஏனைய சுயாதீனச் சட்ட தொழில்சார் நிபுணர்கள் அதேபோன்று நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கம்பனிப் பணி வழங்குநர்கள் ஆகியன நடுத்தர பாதிக்கப்படும்தன்மை மட்டங்களுடன் ஒன்றிணைந்து முறையே நடுத்தரம் மற்றும் நடுத்தரம்-குறைவான அச்சுறுத்தல் மட்டங்களால் தூண்டப்பட்டு, நடுத்தர பணம் தூயதாக்குதல் இடர்நேர்வைக் கொண்டவையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. முன்னைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் சட்டத்தரணிகள், நொத்தாரிசுக்கள் மற்றும் ஏனைய சுயாதீன சட்ட தொழில்சார் நிபுணர்களின் பணம் தூயதாக்குதல் இடர்நேர்வு நடுத்தர மட்டத்தில் மாற்றமின்றிக் காணப்படுகின்ற அதேவேளை, நம்பிக்கைப் பொறுப்பு மற்றும் கம்பனிப் பணி வழங்குநர்களின் பணம் தூயதாக்கல் பாதிக்கப்படும் தன்மையில் சிறிதளவு அதிகரிப்பின் பிரதான காரணமாக நடுத்தரம்-குறைவானதிலிருந்து நடுத்தரமாக அதிகரித்துள்ளது.

கணக்காளர்களின் பணம் தூயதாக்கல் இடர்நேர்வு நடுத்தரம்-குறைவானதாக மதிப்பிடப்பட்டு, நடுத்தரம்-குறைவான அச்சுறுத்தல் மற்றும் பாதிக்கப்படும் தன்மைகளைப் பிரதிபலிக்கின்றது. முன்னைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இடர்நேர்வு மட்டம் மாற்றமின்றிக் காணப்படுகின்றது. அனைத்து பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகளுக்குமிடையில் உங்கள் வாடிக்கையாளரைத் தெரிந்துகொள்ளுங்கள் மற்றும் தொழில்சார் கடப்பாடுகள் என்பன ஊடாக அநாமேதயத்தன்மை பெருமளவில் கட்டுப்படுத்தப்படுகின்றது. எனினும், சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுவதில் பலவீனம் பதிவேடுகளைப் பேணும் நடத்தைகள் மற்றும் ஒழுங்கற்ற பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் விழிப்புணர்வு முக்கிய இடர்நேர்வுத் துறைகளாக பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் சில துறைகள் இனங்காணப்பட்டுள்ளது.

**பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு:**

அனைத்து பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகளுக்கிடையிலும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வுகள், நாட்டின் ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியளித்தல் அச்சுறுத்தல் மட்டத்தில் அதிகரிப்பு காரணமாக நடுத்தரம்-குறைவானது ஆக சிறிதளவு அதிகரித்துள்ள அதேவேளை முன்னைய மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டுப்பாடுகள் பரந்தளவில் மாற்றமின்றிக் காணப்படுகின்றது. சில பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகளில் அவதானிக்கப்பட்ட உட்பொதிந்த பாதிக்கப்படும் மட்டங்களில் சற்று உயர்வு மூலம் இவ்வதிகரிப்புக்கு மேலும் செல்வாக்குச் செலுத்தப்பட்டது.

## ஈ.6. பயங்கரவாதி நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு

**பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு**

இலங்கையின் ஒட்டுமொத்த பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு, அச்சுறுத்தல் மட்டத்தில் நடுத்தரம்-உயர்வானதாக அதிகரித்த அதேவேளை பாதிக்கப்படும் தன்மை நடுத்தர மட்டத்தில் மாற்றமின்றிக் காணப்படுதன் மூலம் தூண்டப்பட்டு **நடுத்தரம்-உயர்வானதாக** மதிப்பிடப்பட்டுள்ளது.

சாத்தியமான புலம்பெயர்ந்தோர் நிதியளித்தல், டிஜிட்டல் ரீதியான தீவிரமயமாக்கம், பிராந்திய கசிவு இடர்நேர்வுகள் மற்றும் முறைசாரா அத்துடன் வளர்ந்துவரும் நிதியியல் மார்க்கங்களைப் பயன்படுத்தல் மூலம் துணையளிக்கப்பட்டு தீவிரவாதம் மற்றும் பிரிவினை வலையமைப்புக்கள் இரண்டிலிருந்தும் தோன்றுகின்ற படிப்படியாக வளர்ச்சியடைகின்ற அச்சுறுத்தல்களை நாடு தொடர்ந்தும் எதிர்கொள்கின்றது.

சட்டவாக்கக் கட்டமைப்பு வலுவாகக் காணப்படுகின்ற அதேவேளை சட்ட அமுலாக்கம் பயங்கரவாதம் தொடர்புடைய புலனாய்வுகள் மற்றும் சொத்துப் பறிமுதல்களை செயலூக்கத்துடன் பின்பற்றுகின்ற அதேவேளை பயங்கரவாத நிதியளித்தல் - குறிப்பான வழக்குத்தொடுத்தல்கள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. தொழிற்பாட்டு மற்றும் மேற்பார்வை மேம்படுத்தல்கள் சில துறைகளில் குறிப்பாக பாரிய நிதி நிறுவனங்கள் மத்தியில் காணக்கூடியதாகவிருக்கின்ற போதிலும் அமுலாக்கம், துறைசார் இணங்குவித்தல் (விசேடமாக பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா வியாபாரங்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் துறைகள் மற்றும் நடுத்தர அத்துடன் சிறிய நிறுவனங்கள் மத்தியில்) என்பவற்றில் நடைமுறைச் சவால்கள் தொடர்ந்தும் இருப்பதுடன் சொத்து மீட்டல் மற்றும் முறைசாரா பணவனுப்பல் முறைமைகள் தற்போது ஒழுங்குபடுத்தப்படுகின்ற போதிலும் மேற்பார்வையின் ஆரம்ப மட்டங்களிலேயே காணப்படுகின்றன.

# ஈ.7. ஏனைய முக்கிய துறைகளின் பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

## சட்ட ரீதியான ஆட்கள்

**பணம் தூயதாக்கல் இடர்நேர்வு – நடுத்தரம் உயர்வானது**

**பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு – நடுத்தரம்**

கம்பனிகள், சங்கங்கள் மற்றும் மன்றங்களின் இடர்நேர்வு பரீசிலனையில்கொள்ளப்பட்டதுடன் பரிசீலனையில்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான ஆட்களில் 95 சதவீதத்திற்கும் அதிகமானவை வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகளை உள்ளடக்குகின்றன. பயன்பெறு சொந்தக்காரர் தொடர்புபட்ட வெளிப்படைத்தன்மை போதாமை முக்கிய இடர்நேர்வுத் துறையாக இனங்காணப்பட்டுள்ளது.

**சட்ட ரீதியான ஆட்களின் நிறுவன இடர்நேர்வு மதிப்பீடு**

| நிறுவன வகை | பணம் தூயதாக்கல் இடர்நேர்வு | பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு |
|---|---|---|
| வரையறுக்கப்பட்ட தனியார் | **நடுத்தரம் உயர்வானது** | **நடுத்தரம்** |
| வரையறுக்கப்பட்ட பொது | **நடுத்தரம்** | **நடுத்தரம் குறைவானது** |
| வரையறுக்கப்பட்ட உத்தரவாத | **நடுத்தரம்** | **நடுத்தரம்** |
| வெளிநாடு/போதுமான இணைப்பு | **நடுத்தரம்** | **நடுத்தரம் குறைவானது** |
| கரைகடந்த | **நடுத்தரம்** | **நடுத்தரம் குறைவானது** |
| இணைக்கம்பனிகள் | **நடுத்தரம்** | **நடுத்தரம் குறைவானது** |
| அமைப்புக்கள் | **நடுத்தரம் உயர்வானது** | **நடுத்தரம்** |
| சங்கங்கள் | **நடுத்தரம் குறைவானது** | **நடுத்தரம் குறைவானது** |

## சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகள்

**பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு – நடுத்தரம்**

வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் வக்ப் இனதும் இடர்நேர்வுகள் பரிசீலிக்கப்பட்டன. பிராந்தியத்திலுள்ள நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகளின் பயன்பாடு மிகவும் மட்டுப்படுத்தப்பட்டதாகும். ஒப்பீட்டளவு, சிக்கல்வாய்ந்த கட்டமைப்புக்கள் இல்லாமல் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு இடர்நேர்வுக்குள்ளாகும் தன்மை மற்றும் பயன்பெறு சொந்தக்காரர் வெளிப்படைத்தன்மை என்பன சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகளின் இடர்நேர்வு மட்டத்தின் குறைவிற்கு வழிவகுத்துள்ளது.

## மெய்நிகர் சொத்து பணி வழங்குநர்கள்

### பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

சமதரத்தவர் தளங்களும் கட்டுக்காப்பல்லாத பணப் பைகளும்: **நடுத்தரம்**

கட்டுக்காப்பு பணப் பைகள் மற்றும் சட்ட பூர்வமான நாணயம்/ மெய்நிகர் மாற்றல்: **குறைவானது**

இலங்கையின் மெய்நிகர் சொத்து அமைப்புமுறை பெருமளவில் ஊக முதலீட்டிற்காக பொதுமக்கள் ஆர்வத்தினை அதிகரித்தல் மற்றும் மெய்நிகர் சொத்துக்களைப் பயன்படுத்துதல் மூலம் அடையாளப்படுத்தப்படுகின்ற அதேவேளை மெய்நிகர் சொர்துக்களுக்கும் மெய்நிகர் பணி வழங்குநர்களுக்குமான அனைத்தையுமுள்ளடக்கிய சட்ட மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பு இதுவரையில்லாதிருத்தல் காரணமாக ஆரம்ப மட்டத்திலேயே காணப்படுகின்றது. மெய்நிகர் சொத்து பணி வழங்குநர்களுக்கான முறையான பதிவு, உரிமமளித்தல், மேற்பார்வை, அமுலாக்கத்தக்க பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கடப்பாடுகள் இல்லாமை துறையினுள் முக்கிய பாதிக்கப்படும்தன்மையினை உள்ளடக்குகின்றது. எவ்வாறிருப்பினும் இலங்கையில் தொழிற்படுகின்ற அல்லது இலங்கைக்கு பணி வழங்குகின்ற முக்கிய வெளிநாட்டு மெய்நிகர் சொத்து பணி வழங்குநர்கள் தொழிற்படுதல் அல்லது பணிகளை வழங்குவதுடன் அவசியமான மற்றும் பன்னாட்டு தகவல் பகிர்ந்துகொள்ளுதல் ஏற்பாடுகளுடன் செயற்பாட்டிலுள்ள வெளிநாட்டுத் தளங்களில் மெய்நிகர் சொத்துக்களை வைத்திருப்பதை தடைசெய்கின்ற மெய்நிகர் சொத்துக்கள் தொடர்புபட்ட விசாரணைகளை சட்ட அமுலாக்கல் முகவராண்மைகள் தொடர்ந்தும் நடாத்துகின்றன.

## நிதியியல் வசதிக்குட்படுத்தல் உற்பத்திகள்/ பணிகள்

### பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வு

நுண்கடன்கள், சிறிய, நடுத்தர தொழில்முயற்சிக் கடன்கள், குழுக் கடன் வழங்கல், கிரமமான சேமிப்புக்கள், நிலையான வைப்புக்கள், நுண் காப்புறுதி, வைப்பு பிணையளிக்கப்பட்ட கடன்கள், அடகுபிடித்தல்: **குறைவானது**

பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் துஸ்பிரயோகத்திற்கு குறைவாக உட்படக்கூடியதாகக் காணப்படுகின்ற தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட அம்சங்கள், மட்டுப்படுத்தப்பட்ட கொடுக்கல்வாங்கல் அளவுகள், வலுவான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல் கட்டுப்பாட்டு வழிமுறைகள் காரணமாக அநேகமாகக் காணப்படுகின்ற உற்பத்திகள், பணிகள் **குறைவான** பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல் இடர்நேர்வைத் தோற்றுவிக்கின்றன என இடர்நேர்வு மதிப்பீடு கண்டறிந்தது. குறைவான இடர்நேர்வுடன் கூடிய உற்பத்திகள் குறைந்த வருமான, கிராமிய அல்லது குறைவாக சேவை வழங்கப்படும் மக்கள் தொகையினால் அநேகமாக அணுகப்படுவதுடன் வீடமைப்பு, வேளாண்மை மற்றும் தொழில்முயற்சியாண்மை போன்ற குறிப்பான நோக்கங்களுக்காகப் பொதுவாகப் பயன்படுத்தப்படுகின்றன. இவ் உற்பத்திகள் ஒருவருக்கொருவர் நேரடியான இடைத்தொடர்புகளை ஈடுபடுத்தி வதிபவர்களுக்கே மட்டுப்படுத்தப்பட்டவையாகக் காணப்படுவதுடன் உள்நாட்டு ஒழுங்குமுறைப்படுத்தல் மேற்பார்வை, இடர்நேர்வு மதிப்பீடுகள், வாடிக்கையாளர் உறுதிப்படுத்தல் நடைமுறைகள், அலுவலர் பயிற்சி மற்றும் கிரமமான கணக்காய்வுகள் தவறான பயன்படுத்தலுக்கான சாத்தியப்பாட்டினைக் குறைத்தல் என்பவற்றுக்குட்பட்டவை.

பணம் அல்லது பெறுமதிமாற்றல் பணி, வெளிநாட்டு பணவனுப்பல் மற்றும் விற்பனை/கொள்வனவு, நிதிக் குத்தகைக்குவிடுதல்: **நடுத்தரமானது**

எல்லைகடந்த கொடுக்கல்வாங்கல்கள் சாத்தியப்பாடு, டிஜிட்டல் உபயோகம் மற்றும் பாரிய கொடுக்கல்வாங்கல் அடிப்படை அளவு என்பன காரணமாக உற்பத்திகள் **நடுத்தர** இடர்நேர்வினைக் கொண்டுள்ளன. கொடுக்கல்வாங்கலைக் கண்காணித்தல், பயிற்சி, வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனம் போன்ற ஏற்கனவே காணப்படுகின்ற கட்டுப்பாட்டு வழிமுறைகளுக்கு மத்தியில் சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடுகளுக்கு தவறான பயன்படுத்தலைத் தடுப்பதற்கு இவ் உற்பத்தி வகைகள் தொடர்ச்சியான ஒழுங்குமுறைப்படுத்தல் கவனத்தைக் கோருகின்றன.

## பயங்கரவாத நிதியளித்தலுக்கு தவறாகப் பயன்படுத்தும் இடர்நேர்விலுள்ள இலாப நோக்கற்ற அமைப்புக்களின் வகைகள்

தேசிய மட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட இலாப நோக்கற்ற அமைப்புக்களின் வகைகள் மாவட்ட மற்றும் பிரதேச மட்ட இலாபநோக்கமற்ற அமைப்புக்களுடன் இணையப்பெற்ற குறைவான இடர்நேர்வு மட்டத்துடன் ஒப்பிடுகையில் பயங்கரவாத நிதியளித்தலுக்கான நடுத்தர துஸ்பிரயோக இடர்நேர்வு மட்டத்தினைக் கொண்டவையாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு நிதியளித்தலில் அவர்களின் பெறுகை/ பன்னாட்டு அரசார்பற்ற அமைப்புக்களின் பாகமாகத் தொழிற்படுதல்/ நாட்டினுள் பல புவியியல் அமைவிடங்களுக்கிடையில் பரந்துள்ள செயற்பாடுகள்/ உயர்வான வருமான மட்டம் மற்றும் சமூகப் பணிகள் மீது ஆண்டுதோறும் நடாத்தப்படும் செயற்பாடுகள் அல்லது கருத்திட்டங்கள் என்பன இதற்குப் பிரதான காரணமாக அமைந்துள்ளன.

வரைபடம் 7: இனங்காணப்பட்ட தேசிய மட்ட இலாபநோக்கமற்ற அமைப்புக்களில் 6 வகைகளுக்கான பயங்கரவாத நிதியளித்தலுக்கு மதிப்பிடப்பட்ட துஸ்பிரயோக இடர்நேர்வு



## ஈ.8. ஆயுதப் பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு பற்றிய தொகுப்பு

தேசிய ஆயுதப்பெருக்க இடர்நேர்வு மதிப்பீடானது நிதியியல் நடவடிக்கைச் செயலணி பரிந்துரைகள் 1 மற்றும் 7 இன்கீழ் இலக்கிடப்பட்ட நிதியியல் தடைகளுடன் தொடர்புபட்ட இடர்நேர்வுகளைப் பகுப்பாய்வு செய்தது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புத் தீர்மானங்கள் 1718,2231,1737 மற்றும் ஆயுதப்பெருக்கம் செய்பவர்களால் தவறாகப் பயன்படுத்தக்கூடிய உள்நாட்டு முறைமைகள், துறைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான கவனம்செலுத்தலுடன் தொடர்புபட்ட தீர்மானங்கள் மூலம் விதிக்கப்பட்ட தடைகள், வழிமுறைகளை மீறுதல், நடைமுறைப்படுத்தாமை மற்றும் ஏய்ப்புசெய்தல் பற்றிய சாத்தியக்கூறுகளை இது மதிப்பீடுசெய்கின்றது.

உலகளாவிய ஆயுதப்பெருக்க நிதியளித்தல் தடைகளை ஏய்ப்புசெய்தல் அச்சுறுத்தலும் கொரிய சனநாயக மக்கள் குடியரசு மற்றும் ஈரான் இஸ்லாமியக் குடியரசு என்பன மூலம் விடாப்பிடியாக தடைகளை ஏய்ப்புசெய்யும் நடவடிக்கைகளினால் தூண்டப்பட்டு, முக்கியமானதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை, நிதியியல் நடவடிக்கைச் செயலணி மற்றும் ஏனைய தொடர்புடைய உலகளாவிய நிறுவனங்கள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டவாறு இவ்வரசுகள் முன்னனிக் கம்பனிகள், பொய்யான வர்த்தக ஆவணங்கள், கடல்சார் ஏமாற்று மற்றும் டிஜிட்டல் சொத்து பயன்பாடு போன்ற நவீன வகைகளை ஈடுபடுத்துகின்றன.

உறுதிப்படுத்தப்பட்ட ஆயுதப்பெருக்க நிகழ்வுகளுடன் இலங்கை தொடர்புகொண்டிருக்கவில்லை. எனினும், அதன் புவியியல் கேந்திர முக்கியத்துவமிக்க அமைவிடம், நிதியியல் தொடர்புகை மற்றும் செயலூக்கமிக்க வர்த்தகப்பாய்ச்சல்கள் என்பன தவறான பயன்படுத்தலுக்கான சாத்தியமான வழிகளைத் தோற்றுவிக்கின்றன. தேசிய ஆயுதப்பெருக்க நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு, அரசாங்க முகவராண்மைகள், மேற்பார்வை அதிகாரிகள், நிதியியல் நிறுவனங்கள் மற்றும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா தொழில்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்கள் என்பவற்றிற்கிடையில் முக்கிய ஆர்வலர்களை மதிப்பீடு செய்தது. இம்மதிப்பீடு பின்னணிப்பகுப்பாய்வு, கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள், ஆர்வலர் நேர்காணல்கள், தரவுப் பகுப்பாய்வு, வகைப்படுத்தலுக்கான உசாவுகைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைக் குழாம் நிபுணர் அறிக்கைகள், நிதியியல் நடவடிக்கைச் செயலணி ஆவணங்கள் மற்றும் வேறு நியாயாதிக்கங்களில் நடாத்தப்பட்ட ஒப்பிடத்தக்க ஆயுதப்பெருக்க இடர்நேர்வு மதிப்பீடுகள் என்பவற்றிலிருந்து வரையப்பட்ட விடய ஆய்வுகள் என்பவற்றை ஒன்றிணைத்தது.

இலங்கைக்கான ஒட்டுமொத்த ஆயுதப்பெருக்க நிதியளித்தல் இடர்நேர்வு **நடுத்தரம்** ஆக மதிப்பிடப்பட்டது. உலகளாவிய முக்கிய அச்சுறுத்தல் சூழலினதும் நிதியியல் நிறுவனங்கள் மற்றும் மேற்பார்வை அதிகாரிகளுக்குள் ஒப்பீட்டளவில் வலுவான இணங்குவித்தல் கட்டமைப்புக்களினால் தணிக்கப்படும் இனங்காணத்தக்க உள்நாட்டு பாதிக்கப்படும் தன்மைகளினதும் ஒன்றிணைவினை இத்தரப்படுத்தல் எடுத்துக்காட்டுகின்றது. விழிப்புணர்வில் இனங்காணப்பட்ட இடைவெளிகள் காணப்படுகின்றமை, மட்டுப்படுத்தப்பட்ட முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு என்பன தொடர்ச்சியான விழிப்பு மற்றும் செயலூக்கமிக்க இடர்நேர்வுத் தணிப்பிற்கான தேவையினை அடிக்கோடிற்றுக்காட்டுகின்றன.

தேசிய தாக்குப்பிடிக்கும் தன்மையினைப் பலப்படுத்துவதற்கு மேம்பட்ட ஆயுதப்பெருக்க நிதியளித்தல் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி, தரப்படுத்தப்பட்ட தானியக்கப்படுத்தப்பட்ட தடைகளை பரீட்சித்தல், மேம்பட்ட பயன்பெறு சொத்தாண்மை வெளிப்படைத்தன்மை, வலுவூட்டப்பட்ட முகவராண்மைகளுக்கிடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் இலக்கிடப்பட்ட ஆர்வலர் குறிப்பான தணிப்பு வழிமுறைகளுடன் ஒன்றுசேர்த்து ஆயுதப்பெருக்க நிதியளித்தல் இடர்நேர்வை மேற்பார்வை மற்றும் கண்காணிப்புக் கட்டமைப்புகளுக்குள் முறைமை ரீதியாக ஒருங்கிணைத்தல் என்பன உள்ளடங்கலாக அத்தியாவசிய முன்னுரிமைகளை ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் இடர்நேர்வு மதிப்பீடு அடையாளப்படுத்துகின்றது.

# முக்கிய பரிந்துரைகள்

வரைபடம் 8: முக்கிய பரிந்துரைகள்

**1**

கிரமமான இடைவெளிப் பகுப்பாய்வினூடாக பன்னாட்டு பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலை ஒடுக்குதலுடன் இலங்கையின் தேசிய சட்டங்களின் தொடர்ச்சியான அணிசேர்தல்

**2**

பணம் தூயதாக்கல்/ பயங்கரவாத நிதியளித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தல் விசாரணைகளினதும் வழக்குத்தொடுத்தல்களினதும் வினைத்திறனையும் செயல்திறனையும் மேம்படுத்துதல் மற்றும் விரிவான பணம் தூயதாக்கல் அடிப்படைத் தவறு/ சட்டத்திற்குப் புறம்பான செயற்பாடு என்பவற்றில் குற்றங்கள் மீது கவனம் செலுத்தி சொத்துப் பறிமுதலுக்காக பிரத்தியேகமான பொறிமுறைகள்

**3**

ஆற்றல்வாய்ந்த இடர்நேர்வு அளவமைத்தல் மற்றும் இடர்நேர்வு அதிகரித்துள்ள துறைகளின் மேற்பார்வைக்கு அதிக மூலவளங்களை ஒதுக்கீடு செய்தல் ஊடாக இலங்கையில் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒடுக்குதல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் இடர்நேர்வு அடிப்படையிலமைந்த மேற்பார்வைக் கட்டமைப்பை அதிகரித்தல்

**4**

ஒட்டுமொத்த உள்நாட்டு மற்றும் பன்னாட்டு ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவித்தலும் வலுப்படுத்தலும்

**5**

தீவிரமடைந்துள்ள அச்சுறுத்தல் துறைகள் மீது கவனம்செலுத்தி நிறுவனமயப்படுத்தப்பட்ட இயலளவு விருத்தி ஊடாக நிறுவனசார் இயலளவினை அதிகரித்தல் மற்றும் பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒடுக்குதல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் விழிப்புணர்வை ஊக்குவித்தல்

**6**

இற்றைவரையான மற்றும் செம்மையான பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒடுக்குதல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலை ஒடுக்குதல் தரவு வைப்பகங்களுக்கு நிகழ்நேர பெறுவழியினை உறுதிசெய்தல்

**7**

இடர்நேர்வு அளவமைக்கப்பட்ட பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல் பரிபாலனத்தினூடாக இலங்கையில் நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவித்தல்

**8**

மெய்நிகர் சொத்து பணி வழங்குநர்களுக்காக முன்மதிமிக்க ஒழுங்குபடுத்துநரை அடையாளப்படுத்துவதை முன்னுரிமைப்படுத்தி பணம் தூயதாக்கலுக்கெதிரான/ பயங்கரவாத நிதியிடலை ஒழித்தல்/ ஆயுதப்பெருக்கத்திற்கு நிதியிடலை ஒழித்தல் கட்டப்பாடுகளை நடைமுறைப்படுத்தல்

**9**

தேசிய இணையப் பாதுகாப்பு நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்தல்

**10**

நிதியியல் நிறுவனங்களுக்கும் பெயர்குறிக்கப்பட்ட நிதியல்லா தொழில்கள் மற்றும் தொழில்சார் நிபுணர்களுக்கும் நிகழ்நேரக் கொடுக்கல்வாங்கல் கண்காணித்தல் மற்றும் இடர்நேர்வு மதிப்பீட்டிற்காக புதிய தொழில்நுட்பத்தை தொடர்ச்சியாகப் பின்பற்றுதல்

**11**

பாதுகாப்பான டிஜிட்டல் முறைமையை உறுதிசெய்வதற்கு தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தலை முன்னுரிமைப்படுத்தல்

**12**

புதிய ஆயுதப்பெருக்க இடர்நேர்வு மதிப்பீட்டில் கண்டறியப்பட்டவைகளுக்கு இசைவாக சமவிகித கட்டுப்பாட்டு வழிமுறைகளை நடைமுறைப்படுத்தல்

**13**

தீவிரப்படுத்தப்பட்ட பயங்கரவாத நிதியியடல் இடர்நேர்வின் கண்டறியப்பட்டவைகளுக்கு இசைவாக சட்ட ரீதியான கட்டமைப்பையும் நிறுவனசார் இயலளவையும் மேம்படுத்தல்

**14**

அதிகரித்த போதைப்பொருள் கடத்தல் அச்சுறுத்தலுக்கிசைவாக நிறுவனசார் இயலளவை அதிகரித்தல்

**15**

சட்ட ரீதியான ஆட்களினதும் சட்ட ரீதியான ஒழுங்கேற்பாடுகளினதும் பயன்பெறு சொத்தாண்மை வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல்